1969 மார்ச் 1]

திரு கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த இ. எஸ். ஐ. திட்டத்தினுடைய நோக்கம் தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுப்பது பற்றியது. ஆனால் 250 தொழிலாளர்கள் இருக்கும் இடங்களில் அவர்கள் 500 பேராக ஆகும் வரையில் இ. எஸ். ஐ. திட்டத்தை அமல் நடத்துவது இல்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் எப்பொழுது 500 பேர்களாவது, எப்பொழுது இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்.—இப்பொழுது 750-இலிருந்து இருக்கக்கூடிய தொழிலாளர் பகுதிகளிலே நிறைவேற்ற அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. விரைவில் அது 600-ஆக ஏற்றுக்கொள்ளப் படும். இப்படி படிப்படியாக அமலுக்கு வரும் என்பதைத் தெரிவித் துக்கொள்ளுகின்றேன்.

திரு. நா. காசிராமன்: தலைவரவர்களே, மொத்தம் 82 நூற்பு ஆலைகளில் உள்ள தொழிலாளர்கள் இந்தக் காப்பு நிதித் திட்டத்தினால் பயன் அடையவில்லை என்று தெரிகிறது. மொத்தம் எவ்வளவு பேர் இம்மாதிரி இன்னும் பயன் பெறாமல் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எவ்வளவு பேர் பலன் பெற வில்லை என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார் இந்த அறிக்கையிலே உள்ளபடி 82 நூற்பு ஆலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலா ளர்களுக்கு இந்த காப்புநிதித் திட்டம் நீடிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதற்குக் காரணம் சட்டப்படி அந்த ஆலைகளிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் எண்ணிக்கை இல்லை என்ற அடிப்படையிலா அல்லது பொருளாதார மந்தத்தின் நெருக்கடி என்கிற அடிப்படையிலா என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எண்ணிக்கை அடிப்படையிலே.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, இ. எஸ். ஐ. திட்டம் அமல்படுத்தப்படுகின்ற மில்களிலே அவர்கள் அதற்கான பணத்தைக் கட்டுவது இல்லை என்ற விவரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படிக் கட்டாத முதலாளிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு பி. வேலுசாமி: சார், இ. எஸ். ஐ. திட்டத்தை அமைப்பதற் கான காண்ட்ரிபியூஷனையும், மேனேஜ்மெண்ட் காண்ட்ரிபியூஷனையும் மில்காரர்கள் கட்டாமல் இருப்பதால் பல தொழிலாளர்கள் அந்தச் சலுகையைப் பெறாமல் இருக்கிறார்கள், அவர்களுக்குத் தண்டனை வழங்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குறிப்பிட்ட மில்லைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக் கலாம்.

கடலலையிலிருந்து மின் சக்தி உற்பத்தி

* 130 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கடல் அலை மூலமாக மின்சாரம் எடுப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: கடல் அலையிலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்வது குறித்து 1964-ல் அரசாங்கம் பரிசீலனை செய்தது.

ஆனால், இது சிக்கனத் திட்டமாகாது என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்ததால், மேலும் முயற்சிகள் எதும் மேற்கொள்ளப் படவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், குறைந்த கட்டணமுடைய நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு நமது மாநிலத்திலே இல்லை. அதன் காரணமாக அண்டை மாநிலங்களிலேயிருந்து வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, சுற்றிலும இருக்கக்கூடிய கடல் தண்ணீரில் அந்த நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அளவிற்கு முயற்சி எடுத்தால் குறைந்த கட்டணமுடைய மின்சாரம் நமக்குக் கிடைக்கும் அல்லவா? அதில் ஓரளவுக்கு அதிகப்படியான செலவிருந்தாலும், வெளிநாட்டிலே இருக்கக்கூடிய நிபுணர்களுடைய உதவியைக் கொண்டாவது இதில் தீவிரமாக முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: பிரான்ஸ் நாட்டிலே அமல்படுத்தப் படுகிறது. முனபு மினசார அமைச்சராக இருநத திரு வெங்கட்டராமன் அவர்கள் அங்கு சென்று அதற்கு வேண்டிய ஆதாரங்களை அறிந்து பரிசேசதனை செய்யச் சொல்லிப் ·ார்த்து, அதன் விளைவாக மிகுந்த நட்டம் வரும், அதனாலே அதை தமிழ்நாட்டிலே மேற்கொள்ள முடியாது என்று அத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் அவர்களே, கடல் அலை மூலமாக மின்சாரம எடுப்பது தாமதமானாலும் கூட அரசாங்கம் நடத்து கின்றவர்கள் தேர்தலுக்கு முன்பாக கடல் பாசியிலே அல்வா செய்து கொடுக்கப் போவதாக பேசி இருக்கிறார்கள். அதை விரைவில் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

(விடை இல்லை.)

திரு. ந. வீராசாமி: தலைவர் அவர்களே, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலே இப்படி கடல் அலை மூலம் மின்சாரம எடுப்பது கஷ்டம் என்றும் அப்படி மின்சாரம் தயாரிப்பதற்கு 150 அடிக்கு மேலே போகின்ற அலைகள் இருந்தால் தான் முடியும் என்றும் கூறி இருக் கிறார்கள். அப்படி உயர்ந்த அலைகள் நம்முடைய கடலில் இல்லாத காரணத்தினால் இது சாததியம் இல்லையென்று அரசாங்கம் கருது கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: மின்சாரம் தயாரிக்க வேண்டு மென்றால் 25 அடி உயரமான (tide variations) அலைகள் தேவை. ஆனால் நமது கடலலைகள் tide variations 4 அடியிலிருந்து 5 அடி உயரமே எழும்புகின்றனவாதலால் இங்கு கடல் அலையை கொண்டு மின்சாரம் தயாரிப்பதற்கு சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு.

THIRU K. VINAYAKAM: Sir, even though the tidal wave does not rise to the extent desirable, was this experiment tried in the Madras State and if so, what is the cost of a unit of electricity so produced and how does it compare with the present energy produced either through the hydel system or the thermal system?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: விவரம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

Disciplinary Proceedings

*111 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to drop the convention to consult the Madras Public Service Commission in cases of disciplinary proceedings in this State; and

(*b*) if so, the details thereof?